# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 21.06.2022 | supeedsam.com | supeedsam@gmail.com







# கோத்தாவும் ரணிலும் ஆகஸ்ட் மாதம் வீடு செல்ல நேரிடும்

## சுவிஸில் ஆருடம் தெரிவித்த இரா.சாணக்கியன்



கோத்தாவும், ரணிலும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வீடு செல்ல நேரிடும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டில் பேர்ன் மாநிலத்தில் நடைபெற்ற புலம்பெயர்ந்த தமிழ் சிங்கள மக்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற குறிப்பிட்ட மக்கள் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி ஊடாக எமக்கொரு வாய்ப்பு கிடைக்குமா என்ற கேள்வியுண்டு.

'நாங்கள் ஜனாதிபதியினை சந்தித்த போது அவரிடம் மிக முக்கியமாக சொன்ன விடயம், வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியினை செய்வதற்காக எங்களது புலம் தமிழர்கள் உதவி செய்வார்கள்.

ஆனால் அதற்கு நீங்கள் எங்களுக்கு அரசியல் தீர்வினை தர வேண்டும் என கூறியிருக்கின்றோம். ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது.

இனிமேல் நமது உரிமைகளை ஜனநாயக முறை ஊடாக மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.வடகிழக்கு இணைந்த அரசியல் தீர்வு இத்தீர்வு ஊடாக தமிழ்பேசும் மக்கள் ஒன்றாக வாழவேண்டும்.

02 ஆம் பக்கத்தில்...

## பிரதமர் பதவி விலக வேண்டும்



தற்போதைய அரசாங்கம் இருக்கும் வரை சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு

02 ஆம் பக்கத்தில்...

## இந்த ஜனாதிபதியின் கீழ் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை

போராட்டம் உருவாக முக்கியக் காரணம் பொருளாதாரப் பிரச்சினைதான் எனவும், அதேவேளை ஜனநாயகம், சமூக நீதி போன்ற ஜனநாயக விடயங்கள் மேலெழுந்து வந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறை மூலம் நாடு ஜனநாயக நிலைக்கு மாறும் வரை நாட்டின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களின் எதிர்பார்ப்புகளுடன்

02 ஆம் பக்கத்தில்...



## நெருக்கடியில் இருந்து ஜனாதிபதி நாட்டை மீட்டெடுப்பார்

### பிறந்தநாள் வாழ்த்தில் மஹிந்த



நெருக்கடியில் இருந்து ஜனாதிபதி நாட்டை மீட்டெடுப்பார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு அவர் ருவிட்டரில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவர் தனது வாழ்வின் மற்றொரு வருடத்தில் அடியெடுத்து வைக்கும்போது அனைத்திற்கும் நல்வாழ்த்துக்கள். அவரது இருப்பு எப்போதும் பலத்தின் ஆதாரமாக இருந்து வருகிறது.

மேலும் நெருக்கடியிலிருந்து இந்த நாட்டை அவர் மீட்டெடுப்பார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது என பதிவிட்டுள்ளார்.

## முல்லைத்தீவில் போரில் புதைத்த மண்ணெண்ணெய் தோண்டியெடுப்பு



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடையார் கட்டுப்பகுதியில் தனியார் காணியொன்றை மே. 31 ஆம் திகதியன்று துப்பரவு செய்யும் போது நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்த பெரல்கள் சில இனம் காணப்பட்டன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தமைக்கு அமைய

02 ஆம் பக்கத்தில்...

## ரணிலுக்கும் மகிந்தவுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றது நட்பு இருக்கிறது அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது

### பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்



(அதிரன்)

ரணிலுக்கும் மகிந்தவுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றது நட்பு இருக்கிறது. அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆரம்பத்தில் தான் பதவியை ஏற்க மாட்டேன் என்று சொல்லியிருந்தார். ஆனால், அவரால் சில விடயங்களைச் செய்யக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன். இதுவரை

02 ஆம் பக்கத்தில்...

## சிறுபோகத்திற்குத் தேவையான உரம் எதிர்வரும் 4ம் திகதி விநியோகம்

சிறுபோகத்திற்குத் தேவையான உரம் எதிர்வரும் 4ம் திகதி விநியோகிக்கப்படும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றை விரைவாக விவசாயிகளுக்கு கையளிப்பதே நோக்கமாகும்.

இதன் பின்னர் ஒவ்வொரு போகத்திற்கும் தேவையான உரத்தை உரிய

02 ஆம் பக்கத்தில்...









# கிழக்கு பல்கலைக்கழக வேந்தருக்கு ஒளிக்கல்லூரியால் கௌரவிப்பு

(படுவான் பாலகன்)



கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு புதிய வேந்தராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் மா.செல்வராசாவை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) இடம்பெற்றது.

ஒளிக்கல்லூரி அமைப்பின் ஏற்பாட்டில், ஒளிக்கல்லூரியின் அதிபர் மு.நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பேராசிரியர் செ.யோகராசா, வெல்லவூர் கோபால், ஓய்வு நிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர் தே.சுப்பிரமணியம், ஓய்வு நிலை கொத்தணி அதிபர் சி.சந்திரசேகரம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

ஓய்வு நிலை ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் சி.குருபரன், ஓய்வு நிலை அதிபர்களான மா.வன்னியசிங்கம், வே.மகேசரெத்தினம், அதிபர் மா.சத்தியநாயகம் ஆகியோர் வேந்தர் மா.செல்வராசாவின் சமூக, கல்வி, ஆன்மிக பணிகள் தொடர்பிலான உரைகளை வழங்கியிருந்தனர். ஒளிக்கல்லூரி அமைப்பின் ஸ்தாபகராக செயற்பட்டு படுவான்கரை கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர் என்பதனை இதன்போது யாவரும் கூறிப்பிட்டு இருந்தனர். இதன்போது வேந்தரை பாராட்டி பிரதேச பொது அமைப்புக்களினாலும், தனிப்பட்ட நபர்களினால் வாழ்த்துப்பாக்களும் வழங்கி வைக்கப்பட்டமையுடன் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ரணிலுக்கும் மகிந்தவுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றது நட்பு இருக்கிறது

நடைபெற்ற செயற்பாடுகள் நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை. ஆனால் இந்தியா யார் பிரதமராக இருந்தாலும் உதவிகளைச் செய்திருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் எங்களுக்கு நேரடியாகவே கூறியிருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கின்ற ஒரு நாட்டை, அயல் நாட்டை பட்டினியாக இருக்க முடியாது என்று சொன்னார்கள். நீங்கள் அதைச் செய்யுங்கள் கட்டாயம் செய்ய வேண்டும் என்றே நாங்களும் சொன்னோம். ஏனென்றால் நாடு முழுக்க சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற வகையில் பொறுத்திருப்போம். மக்கள் பட்டிணிச் சாவை அடைவதற்கு முன்னம:ஏதாவது செய்கிறார்களா என்று பார்ப்போம்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் சனிக்கிழமை கிழக்கு ஊடக மன்றத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் புளொட் அமைப்பின் உப தலைவர் பொன் செல்லத்துரை (கேசவன்), கட்சியன் இடைக்காலச் செயலாளர் நா.ரெட்ணலிங்கம் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட தர்மலிங்கம் சித்தார்த்தன்,

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி உலகம் முழுக்க இந்த பொருளாதார நெருக்கடி இருக்கிறது. பின்னடைவுகள் இருக்கிறது. முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளில் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் கொரோனா, இரண்டாவது ரஷ்ய உக்ரேன் யுத்தம். ஆனால். இலங்கையைப் பொறுத்தமட்டில் இவை எல்லாவற்றையும் தாண்டிய நெருக்கடியொன்றை நாங்கள் முகம் கொடுக்கிறோமென்றால் இந்த கோட்டபாய அரசாங்கத்தினுடைய தவறுதலான நடைமுறைகள் காரணமாகத்தான் பல விடயங்களில் கடந்த காலங்களில் யாரையும் கேட்காமல் தான் செய்வது செரியென்று செயற்பட்ட அகம்பாவத்தினாலேயே ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அவர் இப்போது மன்;னிப்புக் கேட்டாலும் மீண்டும் பொருளாதாரத்தைக் கொண்டுவர முடியாது.

இந்தப் பொருளாதாரப்பிரச்சினை நிவர்த்தியடைவதற்கு நாம் அல்ல பிரதமர் அவர்களே சொல்லுகின்றார் மிக நீண்டகாலம் எடுக்கப்போகிறது. மிக அண்மையில் இன்னும் பெரிய நெருக்கடி வரப்போகிறது. பெற்றோல் மாத்திரமல்ல உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படப்போகிறதென்று. அதை அவர் சொல்லத் தேவையில்லை. நாங்கள் எல்லோரும் நேரடியாகவே பார்க்கின்றோம். இது நிவர்த்தியாவதற்கு மிக நீண்டகாலம் எடுக்கப்போகின்றது. நாம் அனைவரும் பஞ்சத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றோம். பொது மக்களைப் பொறுத்தமட்டில் வட கிழக்கில் இந்தப் பஞ்சத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய கட்சி ஊடாக, அங்கத்தவர்கள் ஊடாக உதவ முடியுமா என்று பார்க்கின்றோம்.

வீட்டுத் தோட்டங்கள், சிறு தோட்டங்கள், செய்வதற்கு புலம்பெயர் தோழர்கள் உதவுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பெரியளவில் செய்யமுடியாது. பேரியளவில் செய்யமுடியாது. ஆரசாங்கமே செய்யவேண்டும். பாராளுமன்றத்தினைப் பொறுத்தவரையில் நாங்கள் சொல்லமுடியம். அதனை செயற்படுத்துகின்ற நிலைமை ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும், அரசாங்கத்திடமுமே தான் இருக்கின்றது.

புலம்பெயர் சமூகத்தால் தற்பொது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று நான் நம்பவில்லை. விரும்புவார்கள் என்றும் நான் நம்பவில்லை. இன்னும் அரசு திருந்தவில்லை. இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னரும் அரசு திருந்தவில்லை. நாங்கள் இந்த குறுந்தூர் மலைப்பிரச்சினையைப் பார்த்தால் தெரியும். இப்பெடுமுதும் காணிகளை அளப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

சர்வகட்சி மகாநாட்டில் கூட ஜனாதிபதி அவர்களிடம் இதனைச் சொன்னபோது அதனைப்பற்றித் தெரியாது என்று சொன்னார் அது நடந்து கொண்டுதான் இருக்கிறது. நான் பாராளுமன்றத்திலும் நீங்கள் திருந்தவில்லை என்று நேரடியாகச் சொன்னேன். ஆகவே புலம்பெயர் தமிழர்கள் எந்த விதத்திலும் இதற்கு முன்வர மாட்டார்கள். தமிழ் மக்களுக்கு நியாயமான தீர:வு கிடைக்கின்றபோது அவர்களும் இதில் பங்குதாரர்களாக இங்கே வந்து அவர்களுடைய முதலீடுகளைச் செய்வதென்றால் அதற்கு உத்தரவாதம் வேண்டும். நான் கடந்த காலங்களில் பார்ததிருக்கின்றேன் அவர்கள் இங்கு முதலீடு செய்ய வந்தால் அதிகாரிகள் புத்திமதி சொல்லியிருக்கிறார்கள் இங்கு வேண்டாம் தெற்கிலே செய்யுங்கள் என்று. அப்படியிருக்கையில் நாங்கள் கேட்கவும் முடியாது. வரவும் மாட்டார்கள்.

எங்களைப் பெறுத்தவரையில் எங்களுடைய தோழர்கள் தங்களால் இயன்றவரை சில சில உதவிகளைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். ஆகப்பின்தங்கிய பிரதேசங்களில் செய்து கொண்டிருக்கின்றோம். தனியொரு கட்சியாகவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவோ செய்யமுடியாது.

21ஆவது திருத்தச்சட்டம் சரியான வரைபு வரவில்லை. எந்தவொரு வரைபும் சமர்ப்பிக்கப் படவுமில்லை. அப்படியிருக்கையில் நாங்கள் அதனைப் பார்க்காமல் ஆதரிக்கிறோம்.ஆதரிக்கவில்லையென்று சொல்வது சரியுமில்லை. ஆனால் ஒன்று ஜனாதிபதியினுடைய அதிகாரம் நீக்கப்பட்டால் அதிலிருந்து வரக்கூடிய ஆளுனருக்கான அதிகாரம் நீக்கப்பட்டு, முதலமைச்சர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். முதலமைச்சர் வருகிறாரோ அன்று பார்த்துக் கொள்வோம். இப்படியான சில விடயங்களை நாங்கள் வலியுறுத்துவோம்,

ஏனென்றால், முழுமையான ஒரு அரசியலமைப்பு மாற்றம் வரப்போவதில்லை. ஆகவே அதில் போயிருந்து கொண்டு நாங்கள் சமஸ்டி அமைப்பது பற்றியெல்லாம் பேசமுடியாது. எது கிடைக்கிறதோ அதை எடுக்க வேண்டும். சரியான முறையில் எடுக்கவேண்டும் என்பதுதான் எங்களது அபிப்பிராயம். அதற்கான சந்தர்ப்பம் ஏற்படப்போவதில்லை. அவர்கள் நினைக்கிறார்கள் போராட்டக்காரர்களை திருப்திப்படுத்தலாமென்று. அது கூட நடைபெறப்போவதில்லை. அரசியல் ரீதியான பிரச்சினை இறுகிக்கொண்டே செல்லும்.

கோட்டபாயவினுடைய பிழையால் நடைபெற்ற விடயங்களுக்கு நாங்கள் ஏன் தலையில் தூக்கி வைக்கவேண்டுமென் என்ற எண்ணப்பாட்டிலேயேதான் எல்லோரும் மறுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவேதான் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று வரமுடியாமலிருந்ததற்குக்காணரம். நாங்கள் ஒரு கூட்டமைப்பாக அதில் பங்குபற்றுவதற்குத் தயாராக இருக்கவில்லை. உண்மையாகவே நாடு முழுவதும் செய்யவேண்டும் என்ற அவிப்பிராயம் வந்தால் அது வேறு விடயம்.

## சிறுபோகத்திற்குத் தேவையான உரம் எதிர்வரும்

காலப்பகுதியில் வழங்குவது தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## பிரதமர் பதவி விலக வேண்டும்

உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய பிரதமர் பதவியில் இருந்து விலகி அனைத்து கட்சி அரசாங்கத்திற்கு புதிய பிரதமரை நியமிக்க வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

## இந்த ஜனாதிபதியின் கீழ் நாட்டுக்கு எதிர்காலம்

விளையாடி போராட்டத்தை காட்டிக் கொடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் கீழ் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்காது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அவர்கள் வெளியேறும் போது நாடு மீண்டும் கட்டியெழுப்பப்படுவதற்கான வாய்ப்புகளுக்கான வாயில்கள் திறக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது மாளிகை வர்த்தக மோசடியே இடம்பெற்று வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,மக்களின் அழுத்தத்தை அரசாங்கம் மோசடிகளுக்கு பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று போராட்டம் நடத்தும் இளைஞர்களை அரசாங்கம் கைது செய்வதாகவும், அவர்களுக்கு எதிராக அரச மிலேச்சத்தனத்தை பிரயோகிப்பதாகவும், கடந்த 9 ஆம் திகதி பயங்கரவாதத்தை ஆரம்பித்தவர்கள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யார் தவறு செய்தாலும் தவறு தவறுதான் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அது தனி நபர்களுக்கு வேறுபடாது எனவும் அவர் தெரிவித்தார். பொது உடன்பாட்டுக்கான பாலமாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மாற்றப்படும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைவரையும் ஒன்றினையுமாறு அழைப்பும் விடுத்தார்.

மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கம்,சர்வ கட்சி பேராட்டக்காரர்கள் உட்பட பல சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (20) இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் போரில் புதைத்த மண்ணெண்ணெய் தோண்டியெடுப்பு

நேற்று (20) முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு அமைய தோண்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் பொலிஸ் அதிகாரிகள், படைஅதிகாரிகள், கிராமசேவையாளர் முன்னிலையில் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நிலத்தில புதைக்கப்பட்ட % பெரல்கள் மீட்கப்பட்டுள்ளன அதில் எரிபொருட்கள் இருப்பது இனம்காணப்பட்டுள்ள நிலையில் அவை மண்ணெண்ணெய் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்வாறு 7 பெரல்களில் இருந்தும் %15 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் இன்று(21) முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கந்தசாமி என்பவரின் காணியில் இருந்தே இந்தப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

தோட்டம் செய்வதற்காக வீட்டு காணியின் பின்பக்கத்தில் கனரக இயந்திரம் கொண்டு துப்பரவு செய்து, பனை மரத்தினை அகற்றும் போது அதில் நிலத்தில் பெரல் இனங்காணப்பட்டுள்ளது.

இவற்றை யார் வைத்தார்கள் என்பது தொடர்பில் எங்களுக்குத் தெரியாது எனத் தெரிவித்துள்ள கந்தசாமி, போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது 2009 ஆம் ஆண்டு கடைசியில் நாங்கள் இடம்பெயர்ந்து போய்விட்டோம் என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது 2011 ஆம் ஆண்டு மீள்குடியேறினோம். எங்கள் காணியில் எதுவித பொருட்களும் இனம்காணப்படவில்லை விவசாய நடவடிக்கைக்கு நிலத்தினை பண்படுத்தும் போதே இவை தென்பட்டுள்ளன என்றார்.




## கோத்தாவும் ரணிலும் ஆகஸ்ட்

இலங்கையில் எதிர்வரும் எட்டாம் மாதமளவில் உணவு பஞ்சம் ஏற்படும் போது எம் மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் 1நாங்கள் ஜனாதிபதியினை சந்தித்த போது அவரிடம் மிக முக்கியமாக சொன்ன விடயம், வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியினை செய்வதற்காக எங்களது புலம் தமிழர்கள் உதவி செய்வார்கள்.

ஆனால் அதற்கு நீங்கள் எங்களுக்கு அரசியல் தீர்வினை தர வேண்டும் என கூறியிருக்கின்றோம். ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. எனினும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அரசாங்கத்தினை காப்பாற்ற நாம் முயற்சிப்பதாக சிலர் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர்.

இன்று எங்களுடைய அரசியலை பொறுத்தவரையில், தமிழர்களுக்கு இரண்டு வகையான அரசியல் பிரச்சனைகள் காணப்படுகின்றன. முதலாவது எங்களது கடந்த கால வரலாறுடன் நாங்கள் எவ்வாறு முகங்கொடுப்பது.

அதாவது 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியும், அதற்கு முந்தைய காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த விடயம், காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் 2009 இற்கு முதல் இருந்தே தொடர்கின்ற விடயங்கள்.

இவற்றில் எதிர்காலத்தில் எங்களுக்கு இருக்கின்ற விடயங்களை பார்த்தால் அரசியல் தீர்வு என்ற விடயம் எங்களுக்கு மிக மிக முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. இவற்றை நாம் சமாந்தரமாக கொண்டு செல்ல வேண்டும்.

நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதியினை சந்தித்து பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசி வருகின்றோம். குறிப்பாக பொத்தவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின் போது நாங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகளில் இவையும் உள்ளடங்குகின்றன.

பலரும் கேட்கின்றார்கள் குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஏன் சாணக்கியன் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கின்றார் என்று. நாங்கள் குருந்தூர் மலையினை சென்று பார்வையிட்டுள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் நீதிமன்றத்தின் உத்தரவினையும் மீறி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி இவ்வாறான விடயங்களை செய்து வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள பல பகுதிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் எங்கெல்லாம் காணி அபகரிப்பிற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருந்திருக்கின்றேன். அவற்றினை எதிர்த்திருக்கின்றேன். இனியினும் இருப்பேன்.

எங்களுடைய அரசியல் தீர்வின் ஊடாகவே இவற்றினை மாற்றியமைக்க முடியும். எங்களுடைய கைகளில் எங்களுடைய அரசியல் அதிகாரம் இருந்தால் நாங்கள் இதனை மாற்றியமைக்கலாம். எனினும் இது நீண்டகால போராட்டமாக இருகின்றது. இலங்கை வரலாற்றில் இதுதான் எங்களுடைய காலமாக இருக்கலாம்.

எங்களது எதிர்காலம் எப்படியாக இருக்க வேண்டும் என சொன்னால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் ஒன்றாக வாழ வேண்டும். முஸ்லீம்களிடமிருந்து கிழக்கினை மீட்க வேண்டும் என கூறி நாடாளுமன்றம் வருகை தந்த பிள்ளையானும், வியாழேந்திரனும், நஸீர் அஹமட்டுன் இணைந்து தற்போது பணியாற்றுகின்றனர்.

எனவே அரசியல் இலாபங்களுக்காக வாய்களில் வந்த அனைத்தினையும் சொல்லக் கூடாது. நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும். அப்படி செய்யாவிட்டால் கிழக்கு மாகாணம் தமிழ் மக்களுக்கும் இருக்காது முஸ்லீம் மக்களுக்கும் இருக்காது.1 எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜே.வி.பி, சஜித் மூலம் நாட்டிற்கு டோலர் கோண்டு வர முடியாது

## திருமலையில் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு





(ரவ்பீக் பாயிஸ் )

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தேர்தல் ஒன்றின் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது எனவும் தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் ஸ்திரதன்மை கொண்ட அரசாங்கம் எனவும் ஜே.வி.பி மற்றும் சஜித் மூலம் நாட்டிற்கு டொலர் கொண்டுவர முடியாது எனவும் விமான போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு திருகோணமலை இயற்கை துறைமுகத்தை பார்வையிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்...

இலங்கையின் இயற்கை துறைமுகமான திருகோணமலையின் இயற்கை துறைமுகம் எந்த ஒரு அபிவிருத்தித் திட்டமும் இல்லாமல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்தட்டத்தின் கீழ் திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் ஹம்பாந்தோட்டைதுறைமுகத்திற்கு மாற்றப்பட்டது.

இயற்கை துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தை உலகின் தலைசிறந்த வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளது கடந்த பல வருடங்களாக இலாபமீட்டாமல் இருந்த இவ் திருகோணமலைத் துறைமுகம் கடந்த 6 மாதங்களில் சற்று இலாபம் தரக்கூடிய துறைமுகமாக மாற்றப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தை மேலும் விஸ்தரிப்பதற்கும் திருகோணமலை துறைமுகத்தை அண்டிய ஆள் கடலை அண்டிய கரையோரத்தில் புதிய ஒரு துறைமுகத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தை தொடர்பிலும் ஆராய்வதற்காக இன்றையதினம் திருகோணமலை துறைமுகத்தை பார்வையிடுவதற்கும் அது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரசாந்த ஜெயம்மான அவர்களின் தலைமையில் இன்றைய கலந்துரையாடல் இடம்பெற்றதாக விமான போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்காமல் இருப்பதற்கு காரணம் நாட்டில் ஸ்திரமான அரசாங்கம் இல்லாமையினாலும் நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேர்தல் ஒன்றுக்கு தயாராக உள்ளீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதில்லளித்தார்.

தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழ்நிலை பொருளாதார நெருக்கடிக்கு தேர்தல் ஒன்றின் மூலம் தீர்வு கிட்டாது எனவும் விமான போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவ்வாறு தேர்தல் ஒன்றுக்கு செல்வோமானால் நாடு இன்னும் பாழாதத்திட்க்கு செல்லும் எனவும் தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் ஸ்திரத்தன்மை கொண்ட அரசாங்கம் எனவும் இருப்பினும் தற்போதைய அரசாங்கத்திற்கு நாடு என்ற வகையில் சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்த அமைச்சர்

நாளை பிரதமர் மாற்றப்படுவதால் அரசாங்கம் மாற்றப்படுவதாலும் நாட்டில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும் அதனால் நாட்டில் டொலர் வந்து கொட்ட போவதில்லை மேலும் மக்கள் விடுதலை முன்னணியினராலும் டொலர் கொண்டுவர முடியாது சாஜித் மூலமும் டொலர் கொண்டு வர முடியாது அவ்வாறு அவர்கள் மூலம் டொலர் கொண்டு வர முடியும் என்றால் அவர்கள் இந்த அரசாங்கத்தை பாரமேடுத்து முன்னெடுத்திருக்க முடியும் எனவே வீழ்த்தப்பட்ட நாட்டின் பொருளாதாரம் படிப்படியாகவே கட்டியெழுப்ப முடியும் அதற்கான வேலைத் திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துச் செல்கின்றோம் என கப்பல், விமானசேவை,விவசாயம் மற்றும் ஏற்றுமதி மூலமாக மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# எரிபோருள் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு கோரி ஆசிரியர்கள் போராட்ட ஊர்வலம்






(பாறுக் ஷிஹான்)

எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு கோரி ஆசிரியர்கள் போராட்ட ஊர்வலம் ஒன்றினை ஞாயிற்றுக்கிழமை (19)முன்னெடுத்தனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி கல்வி சேவையில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டியும் சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கோரி கல்வி பொது சாதாரண பரீட்சை விடைத்தாள் மதீப்பீடு கடமைக்காக வந்திருந்த ஆசிரியர்கர் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் இப்போராட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை வெளிப்படுத்தி தமது எதிர்ப்பினை வெளியீட்டு ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

மேலும் வரிசையில் நிற்போரே உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை சிந்தியுங்கள் எரிபொருள் இல்லாமல் கடமையை தொடர முடியாது கொழும்பு பாடசாலைக்கு மட்டுமா எரிபொருள் பிரச்சினை போன்ற வாசகங்களை எழுதி கோஷங்களை போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் இந்த போராட்டமானது கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை முன்பாக ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை வந்தடைந்து நிறைவடைந்தது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் அப்பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தின் முன்பாகவும் சிறிது நேரம் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்ததுடன் இறுதியாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ. எல் ஏ. வாஹிட் நெறிப்படுத்தலில் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா தலைமையிலான ஆசிரியர் குழு கலந்துரையாடல் மேற்கொண்ட பின்னர் சுமூக தீர்வு ஒன்றும் எட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி, வாழைச்சேனையில் பதுக்கல், விலை மோசடி செய்த வியாபார நிலையங்கள் மீது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பாய்ச்சல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பதுக்கிய பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தலைமையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் சகிதம் இச்சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.





இந்நிலையில், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்வதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு, ஹாட்வெயார் ஒன்றில் விலையினை அழித்து விற்பனை செய்தமை தொடர்பில் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், சில்லறை வியாபார நிலையமொன்றில் பழைய விலையில் பதுக்கி வைக்கப்பட்ட பால்மா பக்கற்றுக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதுடன், அரிசியைக் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதையும், பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களைப் பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

# பேண்கள் கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு அணி வேற்றி வாகை



அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்ட போட்டி காரைதீவு கடற்கரையில் நேற்று நடைபெற்றது. அங்கு காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவு அணி சாம்பியன் கிண்ணத்தை யும் றன்னஸ் அப் இடத்தினை பதியத்தலாவை பிரதேச செயலாளர் அணியும் பெற்றுக்கொண்டது.

படங்கள். காரைதீவு நிருபர் சகா

# தலைமன்னார் புதிய குருவானவருக்கு அமோக வரவேற்பு







( வாஸ் கூஞ்ஞ)

கடந்த வியாழக்கிழமை (16.06.2022) மன்னார் மறைமாவட்டத்தில் நான்கு அருட்சகோதரர்கள் புதிய குருக்களாக மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவரான தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட்பணியாளர் கீ.ஜொனார்த்தன் கூஞ்ஞ தனது பங்கில் சனிக்கிழமை (18.06.2022) தனது முதல் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்க தலைமன்னாருக்கு வருகை தந்திருந்தபொழுது

அவருக்கு தலைமன்னார் மக்கள் வரவேற்பு அளிப்பதையும் புதிய குருவானவர் கீ.ஜொனார்த்தன் அடிகளார் தலைமையில் மன்னார் மறைக்கோட்ட முதல்வரும் மன்னார் மறைமாவட்ட மேராலய பரிபாலகருமான ஆர்.அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார் நானாட்டான் பங்குத்தந்தை எல்.சுரேந்திரன் றெவ்வல் அடிகளார் கீழியன்குடியிருப்பு பங்குத் தந்தை லோறன்ஸ் லியோன் வஞ்சியன் குளம் பங்குதந்தை டீ.அலெக்சாண்டர் சில்வா (பெனோ) அடிகளார் தோட்ட வெளி வேதசாட்சிகளின் ஆலய பரிபாலகர் அருட்பணி ஆர்.சி.றெறன்ஸ் குலாஸ் மற்றும் மாந்தை ஆலய பங்குத்தந்தை அருட்பணி அமல்ராஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து இவ் நன்றித் திருப்பலியை ஒப்பக்கொடுத்தனர்.

தலைமன்னார் பங்குத் தந்தை அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தார்.

# முன்பள்ளி மாணவர்களுக்கு இருக்கும் அறிவு கூட இல்லாத ஜனாதிபதி! இந்த கடினமான காலத்தை நம்பிக்கையுடன் கடக்கவேண்டும்!

## காரைதீவில் வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன்

(வி.ரி. சகாதேவராஜா)

ஒரு முன் பள்ளி மாணவருக்கு இருக்கின்ற அறிவு ஆற்றல் இல்லாத ஜனாதிபதியை நாட்டு மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். அதன் விளைவை அனைத்து மக்களும் இன்று அனுபவிக்கிறார்கள். இந்த கடினமான கால கட்டத்தை மிகுந்த நம்பிக்கையோடு கடக்க வேண்டும்.

இவ்வாறு காரைதீவில் உரையாற்றிய முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முன்னாள் தளபதி அமரர் மகாதேவன் சிவநேசனின் ஓராண்டு ஞாபகார்த்தமாக காரைதீவு விபுலானந்த மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.

இன்றைய இளைஞர்கள் விளையாடுவதற்கு நேரமில்லாமல் பெற்றோலுக்கும் டீசலுக்கும் வரிசையில் நிற்கும் துயரங்களை பார்க்கிறோம். மகிழ்ச்சியாக திரிய வேண்டிய நேரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் வதை அனுபவிப்பதை காண்கிறோம் எமது தமிழ் சமுதாயம். அவர்கள் செய்த பாவம் என்ன? இந்த நாட்டிலே பிறந்தது குற்றமா?





தமிழ் இனம் இந்த நாட்டிலே பல நெருக்கடிகளை பல சவால்களை இந்த கண்டு வந்திருக்கிறது. எதையும் தாங்கிய இதயம் படைத்தவர்கள் தமிழர்கள் .

அந்த வகையில் இன்றைய பொருளாதார நெருக்கடி தமிழர்களுக்கு ஒரு சவால் அல்ல . இந்தநெருக்கடி நிலை நாளை மாறலாம் அல்லது அது உச்சக்கட்டத்தை அடையலாம் . எதுவானாலும் .எமக்கு நம்பிக்கை தேவை

ஒரு காலத்தில் இந்தியாவும் சுதந்திரம் பெறுவதற்காக மகாத்மா காந்தி தலைமையில் அகிம்சை போராட்டத்தை நடத்தியது. புதிய உலக ஒழுங்குக்கு ஏற்ப இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. காந்தியின் அகிம்சைப் போராட்டத்துக்கு அப்பால் கால ஒழுங்கினால் அந்த சுதந்திரம் வழங்கப்பட்டது .

அதன் ஒரு பகுதியாகவே இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது . ஆனால் தமிழர்கள் எமக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை.

நாட்டை விற்று உணவு வழங்க வேண்டிய கேவலமான நிலையில் அரசு இருக்கின்றது. இந்த கடினமான காலத்தை நாம் நம்பிக்கையோடு கடக்க வேண்டும் .

நாம் உச்சகட்ட பொருளாதார நெருக்கடிகளை கடந்த காலங்களில் சந்தித்தவர்கள். நம்பிக்கையோடு பீனிக்ஸ் பறவை போல் நாம் மீண்டும் எழ வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடியை விட எத்தனையோ சவால்களை சந்தித்தது தமிழினம். நிலைமையை சமாளித்து கொண்டு எதையும் தாங்கிக் கொண்டு முன்னேற வேண்டும்..

மைதானத்தில் அதிக வியர்வை சிந்தி இருந்தாரோ அவர் அன்று நன்றாக நித்திரை கொள்வார்.

வடக்குக்கும் கிழக்குக்கும் உறவுப்பாலம் அமைத்தவர் இந்த மண்ணில் பிறந்த தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகள். அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே கற்பித்தல் போது எனது அப்பாவும் தாத்தாவும் அவரிடம் தமிழ் படித்தவர்கள் . யாழ் மக்கள் தமிழை உச்சரிப்பதற்கும் தமிழை செம்மையாக பேசுவதற்கும் வழி வகுத்தவர் சுவாமி விபுலானந்த அடிகள். அவர் பிறந்த மண்ணிலே நின்று பேசுவதில் பெருமையடைகிறோம். எமது கட்சியின் தளபதி ஆக இருந்த பத்தனின் நினைவிலே பங்கு கொள்கிறோம் .எமது கட்சியின் கொடியை எமது தலைவர் ஏற்றி இங்கு ஆரம்பித்து வைத்தார் .சந்தோசமாக இருக்கின்றது. தமிழ் மக்களே எதையும் தாங்கும் வல்லமை படைத்தவர்களே இந்த கடினமான காலத்தை கவனமாக கடக்க வேண்டும். என்றார்.

# வாழைச்சேனையில் பேற்றோலுக்கு பதில் டீசல் வந்ததால் மக்கள் குழப்பம்





## பொலிஸார் தலையீடு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

எரிபொருள் தட்டுப்பாடு நாளாந்தம் இடம்பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றைப் பெறுவதற்கு பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடும் விசாயிகள், வாகனங்களைக் கொண்டு அன்றாடத்தொழிலில் ஈடுபடும் சாரதிகள் தங்களது வாகனத்திற்கான எரிபொருளினைப் பெற்றுக் கொள்வதற்கு நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வரும் என அறிந்து கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்களுக்குத் தேவையான பெற்றோல், டீசலினை பெறுவதற்காக நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு வரிசையில் காத்திருந்தனர்.

அந்த நிலையில், வாழைச்சேனை எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் வராதெனத் தெரிவித்த நிலையில், வரிசையில் நின்ற பொதுமக்கள் குழப்பமடைந்த நிலையில் அவ்விடத்தில் பொலிஸாரின் தலையீட்டினால் குழப்ப நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் வரிசையில் காத்திருந்தவர்களுக்கு பெற்றோல் வரும் போது வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கான அனுமதித் துண்டுகளும் வழங்கி வைக்கப்பட்டது.

ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை டீசல் மாத்திரம் வாகனங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், இதற்கும் வாகனங்கள் சுமார் நான்கு கீலோ மீற்றர் தூரம் வரை நின்று டீசலைப் பெற்றுக் கொண்டனர்.

தற்போது விவசாயச்செய்கை இடம்பெற்று வரும் நிலையில், விவசாயச்செய்கை, தோட்டச்செய்கை மேற்கொள்ள டீசல் தேவைப்படுவதுடன், கடற்றொழில் செல்லும் மீனவர்களுக்கும் டீசல், மண்ணெண்ணெய் தேவைப்பாடு அதிகமாகக் காணப்பட்டுகின்றது.

இதனால் எரிபொருளை நம்பி தொழில் செய்பவர்கள் டீசல், மண்ணெண்ணெய், பெற்றோல் என்பவற்றுக்கு பல மணி நேரம் வெயிலில் இருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் மக்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு நாளை இதற்காக தியாகம் செய்ய வேண்டிய நிலை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவம் மற்றும் பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டு காணப்படுகின்றது.

# சாய்ந்தமருதில் வரலாறு காணாத எரிபோருள் வரிசை

## போக்குவரத்தும் ஸ்தம்பிதம்



(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்றைய தினம் காலை முதல் பல்வேறு குழப்ப நிலைக்கு மத்தியில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் நீண்டவரிசையில் வாகனங்கள் காத்திருப்பதனால் போக்குவரத்து நெரிசல் அந்த இடத்தில் ஏற்பட்டுள்ளது.

சாய்ந்தமருது ஆரம்பிக்கும் ஸாஹிரா கல்லூரி சந்தி முதல் முடிவடையும் மாளிகா சந்திவரை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள், கார்கள் போன்ற வாகனங்களில் வரிசையில் இன்று அதிகாலை முதல் எரிபொருளை பெற நீண்ட வரிசையில் பொதுமக்கள், சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், முன்கள பணியாளர்கள் என பலரும் வாகனங்களுடன் காத்திருந்தனர்.

இதனால் அவசர சிகிச்சைக்காக செல்லும் அம்புலன்ஸ் வண்டிகள் உட்பட அவசர முன்களப்பணி செய்யும் அரச திணைக்கள வாகனங்கள், பொதுமக்கள் எனப்பலரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கியிருந்ததுடன் வாகன நெரிசலை கட்டுப்படுத்தி போக்குவரத்தை சீரமைக்கும் பணியை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.




# காரைதீவு பத்திரகாளி அம்பாளின் தீமிதிப்பு வைபவம்



( காரைதீவு சகா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று ,ஜூலை மாதம் முதலாம் திகதி தீமிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குணசிங்கம் லோகேஷ் தலைமையில் உற்சவம் இடம்பெற இருக்கின்றது .

தினமும் பகல் பூசை 13.30 மணிக்கும் , இரவு பூசை7 மணிக்கும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .


24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா விஷ்ணு ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம்பெற இருக்கின்றது.

இருபத்தி எட்டாம் தேதி செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் வீதியுலா வருகிறார்.

1ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம் பெற்று தீமிதிப்பு வைபவம் இடம்பெறும் .

கூடவே ,அன்று அன்னதான நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது.

இறுதியாக8ஆம் திகதி வெள்ளிக்கிழமை எட்டாம் நாள் வைரவர் திருச்சடங்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றார்கள்.












திருக்கோணமலை நிலாவெளி கோபாலபுரம் கிராமத்தில் கடற்கரையோரமாக வீற்றிருந்து சுமார் 65ஆண்டுகளுக்கு மேலாக அருளாட்சி புரிந்து வரும் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த கும்பத் திருவிழாவானது கடந்த 6ஆம் திகதி யன்று ஆரம்பமாகி திருக்குளிர்ச்சி வைபவத்துடன் இனிதே நிறைவு பெற்றதைப் படங்களில் காணலாம். (திருமலை தட்சா)

# மக்கள் ஒருவேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் நிலை இன்றைய சீரழிவு நிலை இந்த காலத்தில் முடியாது!

## காரைதீவில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரை

(காரைதீவு நிருபர் சகா)

மக்கள் ஒருவேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் துர்ப்பாக்கிய சீரழிவு நிலை தோன்றியுள்ளது..இன்று நாட்டில் தோன்றியுள்ள துர்ப்பாக்கிய சீரழிவுகள் இந்த காலத்தில் முடிவுக்கு வரப் போவதில்லை. இது தீர்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.இதற்கு தமிழ் மக்கள் பழக்கப் பட்டவர்கள். வருவதை நம்பிக்கையோடு எதிர் கொள்ளுங்கள்.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் காரைதீவில் தெரிவித்தார்.




தமிழீழ விடுதலைக் கழகத்தின் அம்பாரை மாவட்ட முன்னாள் தளபதி அமரர் மகாதேவன் சிவனேசன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாளில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு காரைதீவு விபுலானந்த மைதானத்தில் நேற்று முன்தினம்(18சனிக்கிழமை) மாலை கழகத்தின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் பி.ரவிச்சந்திரன் சங்கரி தலைமையில் நடைபெற்றது.

முதலாவது ஆண்டு நினைவு நாளை ஒட்டி இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் காரைதீவு ஜோலி கிங்ஸ் அணியினரை எதிர்த்து போட்டியிட்ட வீரமுனை விஷ்ணு அணியினர் வெற்றி வாகை சூடி இருந்தனர்.

பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேலும் உரையாற்றுகையில்..

இன்று நாட்டில் மிகவும் மோசமான பொருளாதார சீரழிவு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.அனைத்து மக்களும் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒருவேளை உணவுக்கும் கையேந்தி நிற்கும் துரதிஸ்டவசமாக நிலைமை தோன்றி இருக்கின்றது.

இது இன்று நாளை முடிவடையப் போவதில்லை.

இதேவேளை தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருக்கிறோம். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது விட்ட காரணத்தினால் நாடே சீரழிந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களது பிரச்சினைகள் நிச்சயமாக தீர்க்கப்படவேண்டும். எமது காலத்திலே தீர்க்கப்படாவிட்டால் அடுத்த சந்ததிக்கு இது எத்திவைக்கப்பட வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்ச்சிகளையும் ஏனைய நிகழ்ச்சிகளையும் அவ்வப்பொழுது செய்து வருகின்றோம்.

தமிழ்மக்களது கனவு நிறைவேற வேண்டும். தமிழ் மக்களது கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டுமானால் அடுத்த சந்ததிக்கு இந்த விடயம் ஏற்றி வைக்க படவேண்டும்.

இப்படியான நிகழ்வுகள் தொடராக நடக்க வேண்டும்.

எண்பதுகளில் எமது கட்சியின் முக்கிய தளபதிகளில் ஒருவராக செயல்பட்டவர் இந்த மண்ணை சேர்ந்த பக்தன் எனும் சிவனேசன் அவர்கள். அவர் சிறப்பாக செயல்பட்டார். இளைஞர்களிடையே மிகுந்த துணிவை ஏற்படுத்தியவர் தளபதி பக்தன் .அவரது ஞாபகார்த்தமாக இங்கே தற்போதைய அமைப்பாளர் சங்கரி ஏற்பாடு செய்த இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கிறது. வாழ்த்துக்கள்.

இதேவேளை இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ( ஜனா) ,வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க. சிவனேசன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் த.கஜதீபன் ,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் ,உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா ஆகியோர் உரையாற்றினார்.

மேலும் பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள். திருமதி சிவனேசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# மட்டக்களப்பில் மாபெரும் இரத்ததான நிகழ்வு!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு ஹெல்ப் ஹெவர் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான நிகழ்வு மட்டக்களப்பு ஆரையம்பதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் ஹெல்ப் ஹெவர் அமைப்பானது ʼʼவறுமையை ஒழித்து வளர்ச்சியை காண்போம்ʼʼ எனும் கருப்பொருளில் மாவட்டத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு செயல்பாடாக ஹெல்ப் ஹெவர் அமைப்புடன் மட்டக்களப்பு எச்.என்ட்.டி தாதிய பாடசாலை இணைந்த ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாமொன்று முன்னெடுக்கப் பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற இரத்த பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஹெல்ப் ஹெவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவு வைத்தியர் ஹரிஷாந், வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், ஹெல்ப் ஹெவர் அமைப்பின் உறுப்பினர்கள், எச்.என்ட.டி தாதிய பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் என என பலரும் கலந்துகொண்டு இரத்த கொடையினை வழங்கி வைத்துள்ளனர்.

# கோட்டைமுனை மைதானத்திற்கு உலகத்திலேயே தரம் வாய்ந்த மைதானத்தை பராமரிக்கும் இயந்திரங்கள் கோள்வனவு!!




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்மையில் மிக பிரம்மாண்டமான திறந்து வைக்கப்பட்ட கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் மைதானத்தில் கடின பந்திற்கான கிரிக்கெட் போட்டிகள் தற்போது 09 போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்வரும் 18,19,20 ஆகிய திகதிகளில் தொடர்ச்சியாக போட்டிகள் நடைபெறவுள்ளதால் மைதானத்தை பராமரிக்கும் பணிகள் மிக வேகமாக நடைபெற வேண்டியுள்ளதுடன், மைதானத்தின் எதிர்காலத்தை திட்டங்களை கருத்தில் கொண்டு டோரா க்ரீன்ஸ்மாஸ்டர் ஃப்ளெஸ் 2100 டர்ஃப் கட்டர் மற்றும் ரேன்சம்ஸ் சிலிண்டர் மற்றும் புற்களை நறுக்கும் இயந்திரங்களை தற்போது இங்கிலாந்தில் கோட்டைமுனை விளையாட்டு கழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் புவனசிங்கம் வசீகரன் அவர்களும், இராமநாதன் உதயராஜன் அவர்களும், பேரின்பராஜா ரமேஸ்குமார் அவர்களும் இவ்வியந்திரங்களை கொள்வனவு செய்து வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வியந்திரங்களை கொள்வனவு செய்ய லார்ட்ஸ், ட்ரெண்ட் பிரிட்ஜ், வொர்செஸ்டர் கவுண்டி, கிரிக்கெட் கழகம், கிங்ஸ் காலேஜ் டவுண்டன் போன்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு இங்கிலாந்தில் முதல் தர இவ்வியந்திரங்களை உற்பத்தி செய்யும் ஃபைன்டர்ஸ் ஸ்போர்ட்ஸ் டர்ஃப் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து எமது மட்டக்களப்பு மாவட்ட காலநிலை, புற்களின் தரம் என்பவற்றிக்காக மாற்றியமைக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டள்ளது.

இவ்வியந்திரமானது இங்கிலாந்து லோட்ஸ் மைதானத்தை பராமரிக்க பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் இயந்திரம் லோட்ஸ் மைதானத்திற்கான புற்கள், காலநிலைக்கு ஏற்ப செய்யப்பட்டு வருகின்றது. இதன் காரணம் அங்குள்ள புற்கள் நீண்டு வளர்ந்து வரும் நறுக்குவதற்காகவும் காலநிலை செயற்பாட்டிற்காகவும் எற்றாற்போல் செய்யபட்டுள்ளது. ஆனால் ஓகுந மைதானத்தில் வளர்க்கப்படும் புற்கள் படர்ந்து வளரக் கூடியது. மற்றும் கால நிலைக்கு ஏற்றால் போல் மாற்றியமைக்கப்பட வேண்டி இருந்தது. எனவே இப்பொருட்களை கொள்வனவு செய்து இங்கிலாந்தில் வசிக்கும் புவனசிங்கம் வசீகரன் அவர்களும், இராமநாதன் உதயராஜன் அவர்களும், பேரின்பராஜா ரமேஸ்குமார் அவர்களும் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்களை கோட்டைமுனை விளையாட்டு கழகமும், கோட்டைமுனை விளையாட்டு கிராமும், உகக அமைப்பும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இலங்கையில் முதல் தடவையாக இது போன்ற பாரிய இயந்திரங்களை கொள்வனவு செய்து ஓகுந மைதானத்தை ஒரு சிறந்த மைதானமாக கொண்டு செல்வதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

# பூப்பந்து சுற்றுப் போட்டி

( காரைதீவு சகா)

உலக தமிழர் பூப்பந்து சம்மேளனத்தின் ( நிகூஆஊ) அமைப்பின் ஏற்பாட்டில் ஹோலண்ட்( ஏணிடூடுச்ணஞீ )நாட்டின் அனுசரணை மற்றும் இலங்கை பூப்பந்தாட்டக் கிளையுடனும் இணைந்து, அம்பாரை மாவட்ட பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை நடாத்தி வருகின்றது.

விளையாட்டு உத்தியோகத்தர் பத்மநாதன் வசந்தின் கண்காணிப்பில் இச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது.

மூன்றாம் நாள் நிகழ்வுகளான 18,20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள் நேற்று முன்தினம் நிந்தவூர் பூப்பந்தாட்ட உள்ளக அரங்கில் மிகச்சிறப்பாக இடம் பெற்றது



# மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவர சபையின் 25 ஆம் ஆண்டு நிறைவு விசேட திருப்பலி





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவர சபையின் 25 ஆம் ஆண்டு நிறைவு விசேட திருப்பலியொன்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப் ஆண்டகை தலைமையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவர சபையின் அருட்சகோதரிகள் தமது ஆன்மீக மறை பணிக்காக இலங்கைக்கு நாட்டுக்கு வருகை தந்து கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இலங்கையில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்கில் தமது ஆன்மீக மறை பணியினை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தமது துறவற சபை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆம் ஆண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் வகையில்



மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப் ஆண்டகையின் விசேட அனுமதியுடன் பங்கு தந்தை லோரன்ஸ் லோகநாதன் அடிகளாரின் ஆலோசனையுடன் மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது.

திருவுடல் திரு இரத்த பெருவிழா திருப்பலியுடன் மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவர சபையின் 25 ஆம் ஆண்டு வெள்ளிவிழா விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியில் மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவரசபையின் மதர்ஜெனரல் அருட் சகோதரி எஸ் . மெரேல்டா உட்பட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், பங்கு மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவர சபையின் அருட் சகோதரிகளின் ஒழுங்கமைப்பில் துறவர சபையின் 25 வது ஆண்டு நிறைவினை சிறப்பிக்கும் வகையில் இடம்பெற்ற விசேட திருப்பலியில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த மெக்சிகோ நாட்டு எச்.எம்.எஸ்.பி துறவர சபையின் மதர் ஜெனரல் அருட் சகோதரி எஸ் .மெரேல்டா அருட் சகோதரிக்கு அருட்சகோதரிகளினால் பொன்னாடை போர்த்தி பங்குமக்களினால் பரிசுகள் வழங்கி கௌரவிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்கள் மீது மிளகாய்த் தூள் வீசி தாக்குதல்

(பைஷல் இஸ்மாயில்)

திருகோணமலை - ரொட்டவெவ மிரிஸ்வெவ பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் (20) இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், கடந்த 3 நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட கை கலப்புடன் தொடர்புடைய குறித்த இரு குழுக்களுக்கிடையே தொடர்ந்தும் முறுகல் நீடித்து வந்துள்ளது. இந்நிலையில் கடைக்குச் சென்ற சிறுவனை தாக்கியுள்ளதுடன், மிளகாய் தூள் வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இதனால் 3 சிறுவர்கள் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதே வேளை மற்றைய குழுவில் உள்ள 2 சிறுவர்களும் தாம் தாக்கப்பட்டதாக தெரிவித்து அம்பியூலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த 5 சிறுவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த சிறுவர்கள் அனைவரும் 16 வயதிற்கு உட்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பசாலை பங்கில் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா பேரணி







( வாஸ் கூஞ்ஞ)

அகில உலக கத்தோலிக்க திருச்சபையானது ஞாயிற்றுக்கிழமை (19.06.2022) இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவை கொண்டாடியது.

இவ் விழாவை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கு மக்கள் இவ் விழாவை வெகு சிறப்பாக கொண்டாடியதுடன் அன்று மாலை 5 மணிக்கு புனித வெற்றி அன்னையின் ஆலயத்திலிருந்து திவ்விய நற்கருணை அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் எழுந்தருளப்பட்டு இவ் பேரணியானது புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் அலங்கரிக்கப்பட்ட வீதிகள் ஊடாக பரந்த பேசாலை கிராமத்தினூடாக வலம் வந்த வேளையில் தயார்படுத்தப்பட்டிருந்த மூன்று தரிப்பிடங்களில் மறையுரைகள் நிகழ்த்தப்பட்டு பின் மன்னார் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள வெற்றி அன்னை வளாக முன்றலை சென்றடைந்து அங்கு நற்கருணை ஆசீர் பேசாலை உதவி பங்கு தந்தை அருட்பணி டிக்சன் அடிகளாரால் இறைமக்களுக்கு வழங்கப்பட்டது.

இவ் நற்கருணை பேரணியும் வழிபாடுகளும் பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது சமூக தொடர்பு அருட்பணி மையம் இயக்குனர் அருட்பணி எம்.செல்வநாதன் பீரிஸ் வாழவோதய இயக்குனர் அன்ரன் அடிகளார் கீழியன்குடியிருப்பு பங்கு தந்தை அருட்பணி சீமான் கிராடா நிறுவன இயக்குனர் அருட்பணி அ.லொஸ்ரின் அடிகளார் (அ.ம.தி) ஆகியோர் இவ் பேரணியில் கலந்து கொண்டு வழிபாட்டில் மறையுரைகளையும் ஆற்றினர்.

# மன்னார் மறைமாவட்டத்தில் நான்கு மறைகோட்டங்களில் நடைபெற இருக்கும் திருவிவிலிய அறிவுப் போட்டிகள்

(வாஸ் கூஞ்ஞ)

வருடந்தோறும் தேசிய ரீதியில் நடைபெறும் திருவிவிலிய அறிவுப் போட்டிகள் இவ் நடப்பு வருடத்திலும் (2022) நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்டங்களாக மன்னார் மறைமாவட்டத்தில் தற்பொழுது பங்கு ரீதியாக இவ் போட்டிகள் நடைபெற்று முடிந்திருக்கும் இவ்வேளையில் இதையடுத்து மன்னார் மறைமாவட்டத்தில் மறைக்கோட்ட ரீதியில் இவ் போட்டிகள் இடம்பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் மறைமாவட்டத்தில் நான்கு மறைகோட்டங்கள்ணீல் நடைபெற இருக்கும் இவ் போட்டிகள் ஏற்கனவே தெரிவித்திருப்பதற்கு அமைவாக மன்னார் மறைக்கோட்ட மட்டத் திருவிவிலிய அறிவுப் போட்டிகள் அனைத்தும் 25.06.2022 சனிக்கிழமை நடைபெறும் எனவும்

திருவிவிலிய எழுத்துப் பரீட்சை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் பேச்சுப் போட்டிகள் அன்று மதியம் ஒரு மணிக்கும் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையம் அறிவித்திருப்பதாவது;

நான்கு மறைக்கோட்டங்களிலும் நடைபெற இருக்கும் பரீட்சை மற்றும் போட்டிகள் பரீட்சை நிலையங்களாக

வவுனியா மறைக்கோட்டத்தில் அருட்பணி.அ.ஆரோக்கியம் அடிகளார் பொறுப்பில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலையிலும்

முருங்கன் மறைக்கோட்டத்தில் அருட்பணி.அ.யூட் குரூஸ் அடிகளார் பொறுப்பில் மன். முருங்கன் தேசிய பாடசாலையிலும்

மடு; மறைக்கோட்டத்தில் அருட்பணி.எஸ்.லக்கோன்ஸ் பிகிறாடோ அடிகளார் பொறுப்பில் ஆட்காட்டிவெளி றோ.க.த.க.வித்தியாலயத்திலும்

மன்னார் மறைக்கோட்டத்தில் மறைக்கல்வி நிலையப் பொறுப்பில் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டு நிலையைப் புரிந்து கொள்ளாத கல்வி அமைச்சராலும், அதிகாரிகளாலும் பாடசாலை நடத்துவது தோடர்பில் குழப்பமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன

## இம்ரான் எம்.பி

(பைஷல் இஸ்மாயில்)

தற்போதைய நாட்டு நிலையை கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்தும், கல்வி அமைச்சு அதிகாரிகளும் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் தான் இவ்வாரம் பாடசாலை நடத்துவது தொடர்பில் குழப்பமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் நாட் கணக்கில் காத்து நிற்கின்றனர். இதில் அதிபர், ஆசிரியர்களும் விதிவிலக்கல்ல அவர்களும் நீண்ட வரிசைகளிலேயே நிற்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இவ்வாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருளை விநியோகிக்க முடியாது. எனவே, மக்கள் வரிசைகளில் நிற்க வேண்டாம் என்றும் எரிசக்தி அமைச்சர் அறிவித்துள்ளார். இதனை மையமாகவே வைத்தே கொழும்பு




மாவட்டப் பாடசாலைகளையும், நகர்ப்புறப் பாடசாலைகளையும் ஒரு வாரம் மூடுவதென தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், ஏனைய பாடசாலைகள் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை.

அதிபர், ஆசிரியர்களின் நிலையைப் புரிந்து கொள்ளாமல் எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவென்பது தெளிவாகத் தெரிகின்றது. பல ஆசிரியர்கள் அவர்களது வசிப்பிடத்திலிருந்து பல கிலோ மீற்றர்களுக்கப்பாலுள்ள பாடசாலைகளில் பணி புரிகின்றனர். இவர்களுள் அதிகமானோர் மோட்டார் சைக்கிள்களையே தமது பயணத்திற்கு பயன்படுத்துகின்றனர்.

எரிபொருள் இன்மையால் இவர்களால் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பல கிராமப் புற பாடசாலைகளை நடத்த முடியாது என்பது தெளிவானது. அப்பாடசாலைகளுக்கு ஒன்லைன் மூலம் பாடங்களை நடத்துவதற்கான வசதிகளும் இல்லை.

னவே, இந்த அரசாங்கம் எடுத்துள்ள இந்தத் தீர்மானங்களால் என்ன பிரயோசனம் ஏற்படப் போகின்றது என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. நாட்டு நிலையைப் புரிந்து கொள்ள முடியாத கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் இருப்பது கவலையைத் தருகின்றது.

ஒரே நாடு ஒரே சட்டம் என்பது தான் கோத்தாபாய அரசாங்கத்தின் தாரக மந்திரம். இந்நிலையில் நாட்டில் சில பாடசாலைகளை மூடவும், சில பாடசாலைகளை நடத்தவும் எந்த வகையில் தீர்மானம் எடுக்க முடியும். இதுவா ஒரே நாடு ஒரே சட்டம் எனக் கேட்க விரும்புகின்றேன்.

இதனைத் தவிர கிழக்கு மாகாணத்தின் சகல பாடசாலைகளும் வழமை போன்று நடைபெறும் என்ற அறிவித்தலை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் எடுத்துள்ளன என்ற செய்தியும் ஊடகங்களில் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தின் அதிபர் ஆசிரியர்களுக்கு எரிபொருள் பிரச்சினை இல்லை என்ற அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரச வாகனங்களில் பயணம் செய்வோருக்கு எரிபொருள் பிரச்சினை இல்லை. இதனால் அவர்களால் அதிபர், ஆசிரியர்களின் கஸ்ட நிலையை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளின் அமைவிடம் எது. அவற்றுக்கான பொதுப் போக்குவரத்து உள்ளதா. ஒன்லைனில் கற்பதற்கான வசதிகள் கிராமப்புற மாணவர்களுக்கு உள்ளதா. ஒன்லைன் வசதிகள் இருந்தாலும் இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர்களால் போதுமான டேட்டாவைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பன போன்ற விடயங்களைக் கவனத்திற்கு எடுத்திருந்தால் கிழக்கு மாகாணம் இதுபோன்ற நடைமுறைச்சாத்தியமற்ற தீர்மானத்தை எடுத்திருக்காது.

நகர்ப்புற பாடசாலைகளை மூட வேண்டும் என்ற கல்வி அமைச்சரின் அறிவிப்பை இந்த மாகாணம் ஏற்றுக் கொள்ளாது புறந்தள்ளியுள்ளது என்பதையே இது காட்டுகின்றது. ஆளுக்கொரு தீர்மானமும், இடத்துக்கொரு தீர்மானமும் எடுத்து கல்வியில் குழப்பத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

எனவே, நாட்டின் யதார்த்த நிலையை கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் புரிந்து கொள்ள வேண்டும். எரிபொருள் பிரச்சினையைக் காரணம் காட்டி கடந்த வெள்ளிக்கிழமை நாட்டில் உள்ள சகல பாடசாலைகளையும் மூட நடவடிக்கை எடுத்தது போல இந்த வாரமும் சகல பாடசாலைகளையும் மூடும் தீர்மானத்தை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 107 தடவை குருதி வழங்கியவருக்கு பாராட்டு

## உலக குருதிக் கோடையாளர் தினம் கல்முனையில் அனுஷ்டிப்பு







உலக குருதிக் கொடையாளர் தினம் கடந்த (14) செவ்வாய்க்கிழமை கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

உலக குருதிக் கொடையாளர் தினம் (14) ஆகும்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இத்தினம் அனுஷ்டிக்க பட்டது.

2002ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தினால் இத்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 6 வருட காலங்களில் வைத்தியசாலையில் ஐந்து தடவைக்கு மேல் குருதியை தானமாக வழங்கிய சுமார் 100 பேர் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

அங்கே அவர் உரையாற்றுகையில்.. உலகத்திலேயே சிறந்த தானம் குருதி தானம் என்பார்கள். பிறரை உயிர் வாழ வைப்பதற்காக இந்த தானத்தை செய்பவர்கள் மாமனிதர்கள்.

நானும் ஐந்து தடவை குருதி தானம் செய்திருக்கின்றேன். அதற்கான சான்றிதழ்கள் என்னிடம் உள்ளன.

அந்த வகையில் இந்த நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டது ஒருவகையில் பொருத்தமாக இருக்கின்றது என நினைக்கின்றேன்.

இங்கே செல்வகுமார் எனும் குருதிக் கொடையாளர் 10% தடவைகள் குருதி வழங்கி இருக்கிறார். உண்மையிலேயே பாராட்டுகின்றேன். அவருக்கு எனது பணப்பரிசு வழங்குகிறேன். இந்த வைத்தியசாலை இதனை நடத்துவது உண்மையிலேயே மனப்பூர்வமாக பாராட்டுகின்றேன். இத்தகைய பாராட்டுக்கள் விழிப்புணர்ச்சி ஊட்டுவது மட்டுமல்லாமல் குருதியை தானம் செய்பவர்களின் எண்ணிக்கையும் கூட்டும் என்பது எனது கருத்தாகும்.









இதில் நான் செயலாளராக தெரிவு செய்ததற்கு பாராட்டினீர்கள். வாழ்த்துக்கள். நன்றிகள் .

சொர்ணம் உரிமையாளர் எம். விஸ்வநாதன் பேசுகையில்.

குருதிக் கொடையாளர்கள் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும்.

இங்கு பாராட்டப்படுகின்ற குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். இது பன்மடங்காக தொடர வேண்டும் .என்றார்.

வண பிதா ஜேசுதாசன் பேசுகையில்..

நாங்கள் எந்த மாவட்டத்தில் இருந்தாலும் குருதிக் கொடையாளர்களை பாராட்டி கௌரவிப்பது வழமை.அதில் இவ் வைத்தியசாலை முன்னணி வகிக்கின்றது. இது ஒரு மனிதாபிமான பணி இப்பணியை சிறப்பாக மேற்கொள்ளும் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கும அதன் அத்தியட்சகர் டாக்டர் முரளீஸ்வரனுக்கும் குருதி வங்கி பிரிவு வைத்தியர் மற்றும் ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இறுதியில் அங்கு நடந்த கலை நிகழ்ச்சியில் தன்னைக் கவர்ந்த ஒரு கலைஞருக்கு பாராட்டு பரிசு செய்யும் 10% தடவைகள் குருதி வழங்கிய குருதி தானம் செய்த அன்பருக்கு ம் தனது பணத்தை வழங்கினார் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம்.





மேலும் கல்முனை தமிழ் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நடராசா ரமேஷ் உரையாற்றினார்.

அவர் செயலாளராக பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு கௌரவிப்பு நிகழ்வும் அங்கு இடம் பெற்றது.

சிறப்பு அதிதிகளாக எகெட் நிறுவன பணிப்பாளர் வண. பிதா ஏ.ஜேசுதாசன் பிரபல தொழிலதிபர் சொர்ணம் கூட்டு நிறுவன பணிப்பாளர் எம்.விஸ்வநாதன் வைத்திய நிபுணர்கள் வைத்திய அதிகாரி கள் தாதிய பரிபாலகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அதிதிகளாக கலந்து கொண்ட அனைவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**









## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 21

# மூத்த பல்துறை எழுத்தாளர் கந்தவனம் கோணேஸ்வரன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**எழுத்திலக்கண முறைகளைப் பின்பற்றி பல்வேறு வகையான இலக்கிய கலை வடிவங்களை படைப்பவர்கள் எழுத்தாளர்கள் ஆவர். கருத்துக்களை நன்றாக வெளிப்படுத்தும் விதத்தில் மொழியைப் பயன்படுத்தக்கூடிய திறமையான எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு வகையான இலக்கிய வகைகளிலிருந்து தேர்வு செய்து சமூகத்துக்கு தேவையான, அவசியமான விடயங்களை தங்களது எழுத்துக்கூர்மையால் படைத்து வருகின்றனர்.**

அந்த வகையில், யாழ் வடமராட்சியைச் சேர்ந்த கரவெட்டி எனும் இடத்தில் 1950ஆம் ஆண்டு கந்தவனம் தில்லை நாச்சியார் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா வித்தியாலயம், திருக்கோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி பூர்த்தி செய்து இன்று ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபராக உள்ளார்.

இவர் பாடசாலைக் காலத்திலே அதாவது 14ஆவது வயதிலே கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவராக காணப்பட்டார். அதன் நிமித்தம் 1966ஆம் ஆண்டு தினபதி நாளேட்டில் ''காந்தித் தாத்தா'' என்ற தலைப்பிலான நான்கு வரிக் கவிதையுடன் எழுத்திலக்கிய உலகிற்கு பிரவேசமானார். அதனைத் தொடர்ந்து பல பத்திரிகைகளிலும் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் என எழுதியதோடு தனது 19ஆவது வயதிலே சுதந்திரன் வாரப் பத்திரிகையில் செய்தியாளராகவும் பணி புரிந்ததோடு ஈழமுரசு, முரசொலி, தினமுரசு ஆகிய பத்திரிகைகளுக்கும் திருக்கோணமலை மாவட்ட செய்தியாளராகக் கடமை புரிந்து செய்திகள், அரசியல் நிகழ்வுகள், கட்டுரைகள், சமுதாயப் பிரச்சனைகள், மக்களுக்கு எதிரான முறைகேடுகள் எனப் பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு ஊடகத்துறைக்கும் பெருமை சேர்த்தார்.

விவேகி, திரிபுரன், கிறிஸ்டினா போன்ற புனைபெயர்களில் 200ற்கும் மேற்பட்ட அரசியல் சார்ந்த நிகழ்வுக் கட்டுரைகளை எழுதி இலக்கிய உலகில் நாடறிந்த எழுத்தாளரானார். இவைத்தவிர, முகநூலில் இயங்கும் கவிதைக் குழுமங்களின் போட்டிகளிலும் பங்குபற்றி 1000ற்கும் மேற்பட்ட சான்றிதழ்களையும், அவற்றுள் 100ற்கும் மேற்பட்ட விருதுச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார் என்பதோடு தற்போது முகநூலில் தனது எழுத்தாற்றலின் மூலமாக பல்துறை சார் படைப்புகளை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1999இல் ''மனக்கோலங்கள்'' என்ற நூலினையும், 2020இல் ''தமிழ் இலக்கணம் அறிவோம்'' என்ற நூலினையும் படைத்து தனக்கென்ற ஓர் அடையாளத்தை பதித்து நம் திருமலை மண்ணுக்கு பெருமை சேர்த்து இன்று வரை கலைச்சேவை ஆற்றி வருகிறார் என்பது பதிவுக்குரிய விடயமாகும். உயரிய குணமும், நேர்மை தவறாத பண்பும், கர்வம் கொள்ளா தன்னடக்கமும் கொண்ட இக் கலைஞர் தனது கலைத்துறை மூலமாகச் சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை முழுமனதோடு ஆற்றி வருவதோடு இளைய தலைமுறையினரையும் வளர்த்து விட வேண்டுமென்ற செயற்திறனும் கொண்டவராக காணப்படுகின்றார்.

இவ்வாறு பத்தி எழுத்தாளராக, கவிஞராக, அரசியல் கட்டுரை ஆய்வாளராக, நூலாசிரியராக, மேடைப் பேச்சாளராக, ஊடகவியலாளராக எனப் பல்வேறுபட்ட துறைகளிலும் தன்னை அர்ப்பணித்து, தனித்துவமாக அடையாளம் பெற்று 50வருடங்களுக்கு மேலாக கலைச்சேவையாற்றி வருபவரான மூத்த பல்துறை எழுத்தாளர் கந்தவனம் கோணேஸ்வரன் கலைஞர் சுபீட்சம் வாராந்தப் பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.

**? எழுத்துத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றியும், அதனூடான ஆரம்பம் முதல் இன்று வரையிலான பயணம் குறித்தும்?**

நான் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த வேளையில் எனது தோழனும் கழகப்புலவர்




**தொகுப்பு :-**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**



பெ.பொ. சிவசேகரனாரின் மகனுமான தனசேகரன் (சில ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டார்) கையெழுத்துப் பத்திரிகை வெளியிடும் எண்ணத்தைத் தெரிவித்துத் தன்னுடன் இணைந்து கொள்ளுமாறு கேட்டார். அது எனக்குப் புதுமையான விடயமாக இருந்தது. அவருடன் இணைந்தேன். யாழ்நூல் எனும் மாதாந்தக் கையெழுத்தேட்டினை இருவருமாக வெளியிட்டோம். பேனா எழுத்துகளோடு வண்ணப் பென்சில்களால் வரையப்பட்ட படங்களும் எங்களுக்கு மகிழ்சியைத் தந்தன. சில இதழ்களே வெளியானபோதும் எங்களுக்கு அதுவொரு பெருமித அனுபவமாக இருந்தது. அதன் பிறகு 1966ஆம் ஆண்டு காலப்பகுதியில் என் பால்ய நண்பர் கவிஞர் செல்லையா நவசோதிராசாவுடன் இணைந்து கன்னித்தமிழ், தமிழ்மகள் ஆகிய இரு கையெழுத்தேடுகளை மாதந்தோறும் வெளியிட்டேன். இந்தியன் இங்க் எனப்படும் மையினால் தீட்டப்பட்ட அழகிய ஓவியங்களுடனும், வண்ணக் கண்ணா






டித் தாளினால் உறையிடப்பட்ட அட்டைகளுடனும் அவை வெளிவந்தன. செ.அல்லிமுத்து (பிற்காலத்தில் பிரபல ஓவியராகத் திகழ்ந்தவர்) அழகிய படங்களை மகிழ்ச்சியுடன் தீட்டித் தந்தார். மாதத்தின் முதலிரண்டு வாரங்கள் நகராட்சிமன்றப் பொதுநூலகத்திலும், அடுத்த இரண்டு வாரங்கள் மடத்தடியில் அமைந்திருந்த கிளைநூலகத்திலும் வாசகர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன. திருக்கோணமலைக் கவிராயர், தம்பி.தில்லைமுகிலன், மலைமதி சந்திரசேகரன் போன்ற மூத்த கவிஞர்கள் ஆக்கங்களைத் தந்து எம்மை ஊக்கப்படுத்தினார்கள். பல புதிய எழுத்தாளர்களும் உருவானார்கள். இவையும் சில மாதங்களில் நின்றுபோயின. 1966இல் ஜனவரியில் தினபதி நாளேட்டில் இளைஞர்களுக்கான பகுதியில் எனது நான்கு வரிக் கவிதை முதன்முதலாக அச்சேறியது. ''காந்தித்தாத்தா'' என்ற தலைப்பில் யாக்கப்பட்ட பன்னிரண்டு வரிக் கவிதையில் நான்கு வரிகளே பிரசுரமாயின. அதனைத் தொடர்ந்து தினபதியின் சகோதர வாராந்தப் பத்திரிகையான ராதாவில் எனது சிறுவர் கதைகள், கவிதைகள் என்பன வெளியாகின. 196%இல் மலையகத்திலிருந்து வெளியான செய்தி எனும் வாராந்தரி நடத்திய ஔவை கண்ட வாழ்க்கை முறை என்ற கட்டுரைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றேன். நுவரெலியாவில் நடாத்தப்பட்ட பிரமாண்டமான விழாவுக்கு என்னை அழைத்துக் கௌரவித்துப் பரிசு தந்தார்கள். அதே ஆண்டு தினகரன் நடாத்திய இரண்டு கட்டுரைப் போட்டிகளில் பணப்பரிசு பெற்றேன். வீரகேசரியின் சகோதர வாராந்தரியான நவீன விஞ்ஞானி நடாத்திய கட்டுரைப்போட்டியில் பாராட்டுப் பெற்றேன்.

19ஆவது வயதில் தமிழரசுக்கட்சி ஏடான சுதந்திரன் வாரஏட்டின் செய்தியாளராகச் சேர்ந்தேன். செய்திகள், சிறுசிறு கட்டுரைகள், கவிதைகள் எழுதினேன். தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் திருக்கோணமலை முற்றவெளியில் நிகழ்த்திய பேச்சொன்றை அப்படியே எழுதி அனுப்பினேன். அது பிரசுரமானபோது அமிர்தலிங்கம் அவர்கள் தன்னிடம் தொடர்புகொண்டு என்னைப்பற்றி விசாரித்ததாகவும் தனது பாராட்டுதலை எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் பத்திரிகைஆசிரியர் கோவை மகேசன் எனக்குக் கூறியபோது ஒரு பெரிய தலைவரின் பாராட்டுதலைப் பெற்றதால் மனம் நெகிழ்ந்தேன்.

பின்னர் ப.சந்திரமௌலீஸ்வரன் (ஆசிரியாராக இருந்து சட்டத்தரணியாகக் கொழும்பில் பணியாற்றித் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார்.) என்பவருடன் இணைந்து வசந்தம் என்ற மாதப் பத்திரிகையை வெளிக் கொணர்ந்தேன். அச்சில் வந்த அப் பத்திரிகை மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றபோதிலும் அரசியற் சூழலால் ஏழு இதழ்களுடன் நின்றுபோயிற்று. தமிழக வார ஏடான ராணியிலும் ஈழக்கவிராசன் என்ற பெயரில் கவிதை எழுதியுள்ளேன்.

மாணிக்கம் மாதப்பத்திரிகை, ஈழமணி நாளேடு ஆகியவற்றிலும் தேசிய நாளேடுகளான வீரகேசரி, தினகரன் என்பவற்றிலும் அவ்வப்போது இலக்கியக் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதினேன். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ஈழமுரசு நாளேட்டுக்கும் அதன் பின்னர் உருவான முரசொலி நாளேட்டுக்கும் செய்தியாளராகக் கடமைபுரிந்து இவற்றின் ஆசிரியரான திருச்செல்வம் அவர்களின் நம்பிக்கையைப் பெற்றேன். இதன் பின்னர் தினமுரசு வாராந்தரியின் பரபரப்பு நிறைந்த செய்தியாளரானேன். இப்பணியின் மூலம் திருக்கோணமலையில் அரசதிணைக்களங்களில் (மாகாணசபை உட்பட) இடம்பெற்ற முறைகேடுகளை உடனுக்குடன் செய்திகளாக்கி அதிகாரிகள் சிலரின் கோபத்தையும் பொதுமக்களின் அன்பையும் பெற்றேன். சரிநிகர் இரட்டை வாராந்தரியில் அரசியல் நிகழ்வுகள் சார்ந்த கட்டுரைகளை விவேகி என்ற பெயரில் தொடர்ந்து எழுதினேன். அவ்வப்போது கட்டுரைகளின் தன்மைக்கேற்ப திரிபுரன்; கிறிஸ்டினா ஆகிய பெயர்களையும் பயன்படுத்தினேன்.

பின்னர் மட்டக்களப்பிலிருந்து வெளியான தினக்கதிர் நாளேட்டில் நாள்மலர் என்ற தலைப்பில் தினமும் ஒரு சிறுகட்டுரை சிலகாலம் எழுதினேன். அதன் ஞாயிறு இதழில் வாழ்வியற் பண்புகள் சார்ந்த கட்டுரைத் தொடரொன்றை எழுதினேன்.

கனடாவிலிருந்து இயங்கிய ஐ.ரி.பி.சி. வானொலியின் செய்தியாளராகப் பணியாற்றினேன். இலங்கைச் செய்திகள் தினமும் என் குரலிலேயே ஒலிபரப்பாயின.

கனடாவிலிருந்து வெளிவந்த ஆதவன் பத்திரிகைக்கு அரசியற் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தேன்.

சுடரொளி வாராந்தரியாக வந்த போது என் கவிதைகளையும் தாங்கி வந்தது. பின்னர் அது தின ஏடான போது அதன் ஞாயிறு பத்திரிகையில் தொடர்ந்து அரசியற் கட்டுரைகளை எழுதி வந்தேன். நான்காண்டுகளுக்கும் மேலாக இருநூற்றுக்கும் மேற்பட்ட எனது கட்டுரைகள் வாராவாரம் வெளிவந்தன. தற்போது முகநூலில் மட்டுமே எனது

**மிகுதி 09 ஆம் பக்கம் பார்க்க...**

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 21

# மூத்த பல்துறை எழுத்தாளர் கந்தவனம் கோணேஸ்வரன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

படைப்புகளை வெளியிட்டு வருகிறேன். முகநூலில் இயங்கும் கவிதைக் குழுமங்களின் போட்டிகளிலும் பங்குபெறுகிறேன். ஆயிரத்துக்கும் மேற்பட்ட சான்றிதழ்களைப் பெற்றுள்ளேன். இவற்றுள் நூற்றுக்கும் மேற்பட்ட விருதுச்சான்றிதழ்களும் அடங்கும். நான் தமிழகத்துக்குச் செல்லமுடியாத காரணத்தினால் சில விருதுகள் நழுவியும் போயிருக்கின்றன. எனினும் இவ்வாண்டு பெப்ரவரியில் இடம்பெற்ற கவிதைக் குழுமம் ஒன்றின் ஆண்டு விழாவில் எனக்கான விருதொன்றை என் சார்பாக கவிஞர் ஒருவர் பெற்றுத் தன்வசம் வைத்திருக்கிறார். வசதிப்படும் போது அனுப்பி வைக்கவுள்ளார். இவ்வாறாக எனது எழுத்துத்துறைப் பயணத்தின் ஆர்வமும், தேடலும் இன்றும் நீண்டு கொண்டு செல்கின்றது எனலாம்.

**? இத்துறையில் நீங்கள் இதுவரையில் எழுதிய ஆக்கப் படைப்புக்கள், வெளியிட்ட நூல்கள் பற்றிய விபரம்?**

கைநழுவிப் போனவை போக ஆயிரக்கணக்கான கவிதைகள் இருக்கின்றன. அவை பத்திரிகைகளிலும், முகநூலிலும் அவ்வப்போது வெளிவந்தவை. இவற்றுள் கவியரங்கக் கவிதைகளும் அடங்கும்.. இதுவரை எதுவும் நூலுருப் பெறவில்லை. நூலுருப் பெறாத நிலையில் இலக்கியக் கட்டுரைகள்,

சிறுகதைகள் போன்றவையும் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கின்றன. இவையெல்லாம் வாசகர்முன் வைக்கப்பட்டவையே என்பதில் திருப்தி.

மட்டக்களப்பிலிருந்து வெளியான தினக்கதிர் நாளேட்டின் ஞாயிறு இதழ்களில் தொடராக எழுதி வந்த வாழ்வியற் கட்டுரைகள் மனக்கோலங்கள் என்ற பெயரில் 1999இல் நூலுருப்பெற்றது.

முகநூலிற் தொடராக எழுதிவந்த தமிழ்இலக்கணம் தொடர்பான கட்டுரை தமிழ் இலக்கணம் அறிவோம் என்ற பெயரில் 2020இல் வெளியானது.

தற்போது கந்தபுராணத்தை இலகு தமிழில் எழுதிக் கொண்டிருக்கிறேன். அது நிறைவுறுந் தறுவாயில் இருக்கின்றது. இதனை நூலாக்க வேண்டுமென்ற முனைப்பும் இருக்கிறது.

தட்டச்சு செய்யப்பட்ட அரசியற்கட்டுரைத் தொகுப்புகள் பத்து இருக்கின்றன. எதிர்கால வரலாற்று மாணவருக்கு இவை பயன்படக்கூடியவை. அவற்றையும் அச்சில் பதிப்பிக்கும் எண்ணம் உண்டு.

**? இத்துறை தவிர வேறு துறையில் உங்களது பங்களிப்பு குறித்து?**

பாடசாலைக் காலத்திலிருந்தே நல்ல பேச்சாளனாக இருந்திருக்கிறேன். பின்னர் இலக்கிய மேடைகளிலும், விவாத அரங்குகளிலும் சிறப்பான பேச்சாளராக வலம் வந்திருக்கிறேன். தமிழ்த்தினப் போட்டிகளுக்கான நாடகங்களை எழுதிக் கொடுத்திருக்கிறேன். கவிதை நாடகங்களை எழுதிக் கொடுத்திருக்கிறேன். பல கோயில்களுக்குத் திருவூஞ்சற் பாட்டுக்கள் யாத்துக் கொடுத்திருக்கிறேன். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தொண்டனாக 19%0 தொடக்கம் நூற்றுக்கணக்கான மேடைகளில் தேர்தல் பரப்புரையாளனாகத் தொண்டாற்றியிருக்கிறேன்.

**? ஒரு கலைஞராக உங்களது கலைச்சேவை திருகோணமலை மாவட்டத்தில் எவ்வாறு உள்ளது?**

கலைஞனின் எழுத்துக்கும், வாழ்வுக்கும் இயைபிருக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்திருக்கிறேன். புகழ் கிடைக்க வேண்டும் என்பதற்காக மனமொப்பாதவற்றை எவ்வேளையிலும் ஏற்காதிருந்திருக்கிறேன். சொல்லும், செயலும் ஒன்றாக இருக்கவேண்டும் என்பதில் இன்றும் உறுதியாக உள்ளேன். கலைத்துறை தொடர்பாக என்னிடம் ஆலோசனைகளையோ, உதவிகளையோ கேட்டு வந்தவர்கள் திருப்தியுறும் வண்ணம் என்னாலானவற்றைச் செய்திருக்கிறேன். மற்றும்படி நான் திருக்கோணமலையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்பதைப் பிறர்தான் சொல்லவேண்டும்.

**? திருகோணமலை மாவட்டத்தில் மூத்த கலைஞர்களுக்கான வரவேற்பும், அங்கீகாரமும் எவ்வாறு உள்ளது?**

பொதுவாகவே இளைய கலைஞர்கள் அனைவரும் மூத்த கலைஞர்களுக்கு உரிய இடமும், மரியாதையும் கொடுக்கிறார்கள் என்பேன். மூத்தவர்கள் சரியாக நடந்து கொண்டால் இளையவர்கள் மனதில் என்றும் உயர்ந்தே இருப்பார்கள் என்பதுதான் உண்மை.

**? இன்றைய சமூகத்தில் எழுத்துத்துறை மீதான பார்வை எவ்வாறு உள்ளது?**


இன்றைய இளைஞர்கள் நாங்கள் இளைஞர்களாக இருந்த காலத்தைப் போலல்லாது பரந்துபட்ட அறிவைப் பெற்றிருக்கிறார்கள். அதிக தொடர்பாடலைக் கொண்டிருக்கிறார்கள். ஒய்வு குறைந்த வாழ்க்கையை எதிர்கொள்கிறார்கள். இவற்றைப் புரிந்துகொண்டால் பல விடயங்கள் தெளிவாகிவிடும். எக்காலத்திலும் எல்லோரும் கலைஞர்களானதில்லை. எழுத்தாளர்களாகவோ, கவிஞர்களாகவோ மாறியதில்லை. ஒருசிலரே இத்துறையில் ஈடுபடுகிறார்கள். இன்றும் அவ்வாறேதான் இளைஞர்கள் எழுத்துத் துறையிலும், ஏனைய கலைத்துறைகளிலும் ஈடுபாடு காட்டுகிறார்கள். அவர்களிடம் ஆரோக்கியமான பார்வையையும், சிறந்த சிந்தனைகளையும், புதிய உத்திகளையும் என்னால் அவதானிக்க முடிகிறது. எனவே இன்றைய சமூகத்தில் எழுத்துத்துறை மீதான பார்வை பிரகாசமானதாகவே காணப்படுகிறது.




**? இத்துறையில் நீங்கள் பெற்ற சாதனைகள், விருதுகள் குறித்து?**

இன்று முகநூல் குழுமங்களில் கவிதை புனைவதன் காரணமாக உலகளாவிய நிலையில் தரமான ஒரு கவிஞனாக அடையாளம் பெற்றிருக்கிறேன் எனலாம். சாதனைகள் என்று வேறு சிறப்புகள் எனக்கு இருக்கின்றனவா என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும். விருது பற்றிக் கூறுவதானால்பாரதிநூற்றாண்டு விழா நடைபெற்ற நேரம்.. திருக்கோணமலை நகராட்சி மண்டபத்தில் தமிழகக் கவிஞர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் தலைமையில் பாரதி மீண்டும் பிறக்கவேண்டும். என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. அன்றைய முன்னணிக் கவிஞர்களுடன் நானும் கவியரங்கில் பங்குபற்றியிருந்தேன்.





நான் கவிதை பாடி முடித்ததும் எழுந்து வந்த பெருங்கவிக்கோ என்னைக் கட்டியணைத்தபடியே பாரதி மீண்டும் ஏன் பிறக்க வேண்டும்?. தம்பி.என்தம்பி....நீயே அந்தப்பாரதி. என்று மண்டபம் நிறைந்த மக்களின் கைதட்டல்களுக்கு மத்தியிற் சொன்ன வார்த்தையை நான் பெரு விருதாகக் கருதுகிறேன். எவரையும் இலகுவில் கவிஞர் என்று அழைக்க விரும்பாத திருக்கோணமலைக் கவிராயர் அன்று தொடக்கம் என்னைக் கவிஞர் என்று விளிக்கத் தொடங்கியதையும் பெறற்கரிய விருதாக நான் கொள்கிறேன்.

மற்றும்படி நகரமுதல்வரால் வழங்கப்பட்ட இலக்கியச் சாதனையாளர் விருதொன்று பெற்றுள்ளேன். கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டபோது முகநூற் குழுமங்களால் வழங்கப்பட்ட விருதுப்பெயர் தாங்கிய சான்றிதழ்கள் பலவற்றைக் கொண்டிருக்கிறேன். தமிழகத்தில் விழாக்களிற் கலந்து நேரிற்பெற முடியாமற் போனதால் இரு கேடய விருதுகள் என்னை விட்டு நழுவிப் போயுள்ளன. எனினும் அவற்றை விருதுச்சான்றிதழ்களாக நான் பெற்றுக்கோண்டேன். தமிழகத்தில் இவ்வாண்டு இடம்பெற்ற இலக்கிய விழாவில் எனக்கான கேடய விருதொன்றைத் தமிழகக்கவிஞர் ஒருவர் பெற்று அதன் படத்தை அனுப்பி வைத்திருக்கிறார். அரச அல்லது மாகாணசபை விருதுகள் எவற்றையும் இதுவரையில் நான் பெறவில்லை.

**? திருகோணமலையில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களின் எழுத்துத்துறை மீதான ஈடுபாடு எவ்வாறு உள்ளது?**

சந்தோஷப்படத் தக்கதாகவே இருக்கிறது. இளையோர் சிலரின் எழுத்து நடையையும் அவர்கள் சொல்ல வந்தவற்றைத் தெளிவுறச் சொல்லும் உத்தியையும் கண்டு வியக்கிறேன். பெயர் சொல்லிப் பாராட்டவே மனம் விரும்புகிறது. ஆனால் அது பொருத்தமற்றதாகிவிடும் என்பதால் அஞ்சுகிறேன்.

**? ஒரு மூத்த கலைஞராக திகழும் நீங்கள் திருகோணமலை மாவட்டத்தில் இலக்கியத் துறையிலுள்ள இடர்பாடாக கருதுவது?**

அப்படி ஏதும் இருப்பதாக நான் எண்ணவில்லை. எழுத்துத்துறையில் உண்மையான ஈடுபாடு கொள்பவர்களுக்குத் தடையேதும் தெரிய வாய்ப்பில்லை. வெளியில் இருந்து பார்ப்போருக்கு எப்படியோ நானறியேன். அச்சு ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் முன்னரைவிடப் பெருகிக் கிடக்கின்றன. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதில் தடையில்லை. எனினும் நூலுருவாக்க முனைபவர்களுக்கு செலவுச் சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. இது இலங்கையர் அனைவருக்கும் பொதுவான இடர்பாடே.!

**? இன்றைய காலகட்டத்தில் இலக்கியத்தின் போக்கும், தேவையும் எவ்வாறு உள்ளது?**

இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை. எல்லாக் காலங்களிலும் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. சில சமயங்களில் துன்பச்சுவை பெருகும்போது சமுதாயம் தள்ளாடுகிறது. இப்போது நம் வாழ்வில் துன்பச்சுவை மேலோங்கியே நிற்கிறது. கலைஞர்கள் துன்பச்சுவையின் தாக்கத்தையும் அதற்கான காரணத்தையும் தமது படைப்பின் கருவாகக் கொள்ளத் தயங்கக்கூடாது. ஆர்வமுள்ள ஒரு கலைஞனின் சமுதாயப்பணி இது.

அதேவேளை பண்டைய இலக்கியச் சுவைகளையும் மனதை மகிழ்விக்கும் சுவைகளையும் புறந்தள்ளல் கூடாது. அவற்றையொட்டிய படைப்புகளும் தொடர்ந்து உருவாக வேண்டும். இவைதாம் மனிதருக்கு மகிழ்வையூட்டி வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்த வல்லன.

எதார்த்தம் என்ற பெயரில் வறட்சிகளை மட்டுமே நோக்காமல் அனைத்துத் துறைகளிலும் கலைஞர்களுக்கு ஆர்வம் இருக்கவேண்டும். இவற்றைச் சரியாகக் கைக்கொள்வதன்மூலம் எதிர்காலச் சந்ததிக்கு எம் வாழ்வியற் தன்மைகளை எடுத்துச் செல்லலாம்.. இந்தப்பணி இளங்கலைஞர்களுக்கே உரியது.

**? நமது மண்ணின் ஈழத்து பாரம்பரிய கலைகள் மருவியடைந்து செல்லும் நிலை காணப்படுகிறது. அது குறித்து?**

இது இயல்பானதே. நவீன தொழில்நுட்பங்களின் வரவு சிலபாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பதும் உண்மையே.! ஆயினும் சிரமத்துடன் நம்கலைஞர்கள் பண்டைய ஈழக்கலைகளின் சிறப்பைப் பாதுகாத்து வருகிறார்கள். முடிந்தவரை அடுத்த தலைமுறைக்கும் அவற்றைக் கொடுக்கிறார்கள். கிராமப்புறங்களில் இவை நிகழ்கின்றன. இன்றும் சில ஆலயங்களில் கூத்துகளும், வேறுகலைகளும் அவற்றின் தரங்குறையாமல் நிகழ்த்தப்படுகின்றன. எனினும் வேறுவழிகளிலும் முயற்சி செய்தால் பண்டைய கலைகள் நிச்சயம் ஒளி பெறும்.

**? நிறைவாக, மூத்த கலைஞராக உங்களது அனுபவத்தினூடாக சாதிக்க நினைக்கும் இளந்தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

தினமும் வாசியுங்கள். நிறைய வாசியுங்கள். வாசிப்புக்காக முடிந்தவரை அதிகநேரம் ஒதுக்குங்கள். வாழ்நாள்வரை வாசிப்போம் என்று உறுதி பூணுங்கள். வாசிப்பினூடாகவும் வாழ்க்கை அனுபவங்களினூடாகவும் புதிய சிந்தனைகளைப் பெறுவீர்கள். அவை உங்கள் படைப்புகளை உயர்த்தி நிற்கும்.

கொள்கையோடு வாழுங்கள். அங்கீகாரத்துக்காகவோ, விருதுகளுக்காகவோ எவர்பின்னாலும் போகாதீர்கள். திறமையிருப்பின் அவையே உங்களைத் தேடிவரும். அப்படி நிகழாவிட்டாலும் உங்கள் திறமை மக்கள் மத்தியில் உங்களை வாழ்விக்கும். உங்கள் படைப்புகள் நிலைத்து நிற்கும்.யாரும் உங்களை மக்களிடமிருந்து மறைத்துவிட முடியாது என்பதில் நம்பிக்கை வையுங்கள். எனக் கூறிக்கொண்டு எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**நன்றி!**

மூத்த பல்துறை எழுத்தாளராக தன்னை நிரூபித்து தனக்கென்று ஓர் தனித்துவ அடையாளத்தைப் பெற்று நம் திருகோணமலை மண்ணிற்கு அளவில்லா புகழையும், பெருமையையும் தேடித் தந்த இக் கலைஞர் மென்மேலும் பல படைப்புகளைப் படைத்து உலகளவில் கலைச்சேவை ஆற்றி விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்று தேகாரோக்கியத்துடன் இருப்பதற்கு பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

**தொடரும்.....**

**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**